(2020-21-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE 20 UTM 510**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : டிசம்பர் - 2022**

**பி.ஏ. – தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**ஐந்தாம் பருவம்** **நேரம் : 3 மணி**

**பகுதி – III**

**இலக்கணம் – தண்டி, யாப்பு**

**பகுதி – அ** **( 10 x 1 = 10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. இருசீரான் வந்த அடி................

   (அ) முச்சீரடி (ஆ) குறளடி (இ) அளவடி (ஈ) நெடிலடி

2. வெண்பாவின் வகைகள்..............

   (அ) 3 (ஆ) 5 (இ) 4 (ஈ) 7

3. ஒரு கருத்து ஒரு பாடலில் முற்றுப்பெறுவது...................

   (அ) குளகம் (ஆ) தொகைநிலை (இ) முத்தகம் (ஈ) தொடர்நிலை

4. தீவகம் எனும் சொல்லின் பொருள்................

   (அ) கடல் (ஆ) தீவு (இ) மலை (ஈ) விளக்கு

5. மன எழுச்சி காரணமாகத் தோன்றும் சுவை................

   (அ) வியப்புச் சுவை (ஆ) அச்சச்சுவை (இ) வீரச்சுவை (ஈ) இழிப்புச் சுவை

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. சீர் என்றால் என்ன?
7. பாக்களுக்குரிய ஓசைகள் யாவை?
8. தொழில் உவமை என்றால் என்ன?
9. நுட்பவணி என்றால் என்ன?
10. சுவையணியின் வகைகளைக் கூறுக.

**பகுதி – ஆ** (5 x 4 = **20** மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** (K3)

11. அ) தளைகளின் வகைகளைப் பற்றி எழுதுக.

    (அல்லது)

    ஆ) அடி என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

12. அ) பஃறொடை வெண்பா – சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) கைக்கிளை மருட்பா – விளக்குக.

13. அ) செய்யுள் வகைகள் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) ஏது உவமையைச் சான்று காட்டி விளக்குக.

14. அ) வேற்றுமை அணியின் இலக்கணம் யாது? விளக்குக.

(அல்லது)

ஆ) அதிசய அணி பற்றி எழுதுக.

15. அ) தன் மேம்பாட்டுரை அணியின் இலக்கணத்தைச் சான்றுடன் விளக்கியுரைக்க.

(அல்லது)

ஆ) உருத்திரச் சுவையை நும் பாடப்பகுதி கொண்டு தெளிவுபடுத்துக.

பகுதி – இ (4 x 10 = 40 மதிப்பெண்கள்)

**பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க. வினா எண். 16க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும்.** (K4 & K5)

16. யாப்பின் உறுப்புகள் குறித்துக் கட்டுரை வரைக.
17. அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள் பற்றி விவரித்தெழுதுக.
18. வஞ்சிப்பாவின் இனங்கள் குறித்து விரிவாக எழுதுக.
19. உருவக அணியின் வகைகளைப் பற்றி விளக்கியெழுதுக.
20. தற்குறிப்பேற்ற அணி பற்றி விவரிக்க.
21. அவலச்சுவை – நகைச்சுவை சுவையணியில் இடம்பெறும் பாங்கை எடுத்துரைக்க.

*********